திண்டுக்கல், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.
பிறப்பிப்பவர்: திரு.ச.பாண்டித்துரை, பி.எஸ்.சி(விவ).,

---

செ.மு.ஆ.எண்.ஆ2/8518/2020 நாள்: 30.04.2021

பொருள்: நியமனம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4-இல் அடங்கிய பணிகள் - நேரடித் தேர்வு 2018-19 மற்றும் 2019-20-ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப்பட்டது - திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது - பணி நியமன ஆணை வழங்கியது - பணியில் சேர்ந்து கொண்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 கடித எண்.2359/PSD-H1/2020, நாள்:19.10.2020
2. சென்னை,வேளாண்மை இயக்குநர், அவர்களின் செமுஆ.எண்.அநிபி5/22094/20, நாள்: 04.11.2020.
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் ஆ2/8518/20,நாள்:16.11.2020.

-----------

**ஆணை:-**

பார்வை (1)-இல் காணும் கடிதத்தின்படி, 2018-19 மற்றும் 2019-20-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4-இல் அடங்கிய பணிகள் நேரடித் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு பார்வை (2) -இல் காணும் செயல்முறை ஆணையின்படி, இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளருக்கு பார்வை (3)-இல் காணும் செயல்முறை ஆணையின்படி, பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

பார்வை (2) - இல் காணும் செயல்முறை ஆணையில் வழங்கிய வழிகாட்டுதலின்படி, அரசுப்பணியில் சேர்ந்து கொண்டுள்ள கீழ்க்கண்ட பணியாளரின் பணியினை தனியர் பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி | பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | D.பூபதி விஜயன், இளநிலை உதவியாளர் (பிணையம்) | குஜிலியம்பாறை, வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் வேளாண்மை விரிவாக்க மையம் குஜிலியம்பாறை | 20.11.2020 பி.ப | 20.11.2020 பி.ப |

தபிபா

2) இப்பணி வரன்முறை சென்னை உயர்நீதிமன்ற சென்னை/ மதுரை கிளைகளில் இந்நியமனம் தொடர்பாக நிலுவையில் உள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டது என்றும் உத்தரவிடப்படுகிறது.

"This regularization is subject to the outcome of the W.Ps Pending on the files of the Hon'ble High court of Madras / Madurai Bench of the Hon'ble High court of Madras" relating to the recruitment to the Post included in Combined Civil Services Examination – IV for the year 2018-19, and 2019-20 recruitment"

3) மேற்காணும் பணியாளர் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் இரண்டு ஆண்டு கால தகுதிகாண் பருவத்தினை, மூன்று ஆண்டு தொடர்பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும். தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை முடிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னரே இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் தகுதி காண் பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிடப்படும். அதனைத் தொடர்ந்தே இப்பதவியில் இரண்டாவது மற்றும் தொடர் காலமுறை ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவராவார் என்றும் தெரிவிக்கலாகிறது.

ஒம்/ ச.பாண்டித்துரை
வேளாண்மை இணை இயக்குநர்,
திண்டுக்கல்.

பெறுநர்

திரு.D.பூபதி விஜயன்,
இளநிலை உதவியாளர் (பிணையம்),
வேளாண்மை விரிவாக்க மையம்,
குஜிலியம்பாறை.
-உரிய வழிமுறையாக.

நகல்: வேளாண்மை உதவி இயக்குநர், குஜிலியம்பாறை.
நகல்: இருப்பு கோப்பிற்கு.

/ஆணைப்படி/

ஆட்சி அலுவலர்.